# கணக்கீடு
# ACCOUNTING

## G.C.E - A/L

## சொத்து விற்பனை


ஆசிரியர்
K.T. சீலன்



- வெளியீடு -

C.B.A கல்வி நிலையம்
கதிரேசு வீதி வவுனியா.

சுடர் கல்வி நிலையம்
குட்செட் றோட் , வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொத்து முடிவுறுத்தல் கணக்குகள்

**1)** மாருதி நிறுவனம் 150000/= க்கு பொறி ஒன்றை கொ/வு செய்தது.இதற்கு உட்சுமை கூலியாக 25000/=மும், பொருத்துதல் செலவாக15000=மும் ஏனையசட்டச் செலவுகளாக10000 பரீட்சார்த்தஉ / தி செலவாக7000=ஏற்பட்ட பயனபடுஆயுட் காலம் 10வருடங்கள் இறுதிவிளைன பெறுமதி.

**வேண்டப்படுவது :-**

1 பொறி க/கு 2 ஆண்டுக்கான பெறுமான தேய்வுக் க/கு
3 3 ம் வருட இறுதியில் பொறியின் பயன்படு பெறுமதி
4 5 ம் வருட இறுதியில் ஐந்தொகை சுருக்கம்

**2)** அறிவு நிறுவனம் 310000/= கிரயமான மோட்டார் ஒன்றை கொ/வு செய்தது. வரியாக 35000/= யும், கொண்டு வரும் செலவாக 15000/= யும், பயன்பாட்டுக்கு முன்னதாகஏற்பட்ட செலவு 25000/= ஏனைய சட்டசெலவுகள் 15000/= 3மாதங்களின் பின் ஏற்பட்ட திருத்துதல் செலவு 8000/= பயன்படு ஆயுட்காலம் 14 வருடங்கள் இழிவுப்பெறுமதி 10000./=

**வேண்டப்படுவது:-**

1) மோட்டார் க/கு 2வருடாந்த பெ.தே வின் அளவு
3) பெ.தே. வீதம் 4 4ம் வருடஇறுதியில் பெ. தே இடும்தொகை
5) 5 ம் வருட இறுதியில் ஐந்தொகை சுருக்கம்

**3)** 1.07.00 ல் 2000000/= வுக்கான பெறுமதி உடையதும் 2800000/= வாடகைக் கொள்வனவு பெறுமதி உடையதுமான மோட்டார் வாகனத்தைவரையறுக்கப்பட்ட தனுசன் நிறுவனம் கொள்வனவு செய்தது இருக்கை அமர்த்தல் செலவாக 350000/= வும் பதிவு செய்தல் , இலக்கத் தகடு பொருத்துதல் செலவாக50000/= வும் ஏற்பட்டது போக்கு வரத்து, கொண்டு வரும் செலவாக 100000/= ஏற்பட்டது வருடாந்த காகிதாதி, அனுமதிப் பத்திரமாக 80000/= வும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 மோட்டார் வாகன க/கு
2 ஆண்டுக்கான பெ.தே
3 பெ.தே. வீதம்
4 31.12.00 ம் ஆண்டுக்கான பெ.தே தொகை
5 31.12.00 - 31.12.04 வரையான பெ.தே.ஏ க/கு
6 31.12.04 ல் ஐந்தொகை சுருக்கம்

4) ரவி நிறுவனம் 100000/= கிரயமான இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்தது பயன்படு ஆயுள்காலம் 9 வருடங்கள் இழிவுப் பெறுமதி 10000/= 3ம் வருடஆரம்பத்தில் பொறியின் செயற்திறனை அதிகரிப்பதற்காக 14 000 திருத்த வேலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது இழிவுப் பெறுமதியில் மாற்றம் இல்லை.

1 ஓராம் வருடத்திற்கான பெ.தே
2 இரண்டாம் வருட இறுதியில் ஐந்தொகைச் சுருக்கம்
3 மூன்றாம் வருடத்திற்கான பயன்படு பெறுமதி
4 மூன்றாம் வருடத்திற்கான பெ.தே.அளவு
5 வருடம் ஒன்று 4 வரையான பெ.தே.ஏ க/கு
6 4 ம் வருட இறுதியில் ஐந்தொகைச் சுருக்கம்

5) பொறிஒன்று 200000/= கொள்வனவு செய்யப்பட்டது பயன்படு ஆயுட்காலம் 12 வருடங்கள் இழிவுப் பெறுமதி 20 000/= 5ம் வருட ஆரம்பத்தில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக 200000/= திருத்த வேலை ஒன்று இடம் பெற்றது இழிவுப் பெறுமதியில் மாற்றம் இல்லை

1 முதல் ஐந்து வருடங்களுக்கான பொறிக் கணக்கு
2 ஆண்டுக்கான பெ.தே
3 ஐந்து வருடங்களுக்கான பெ.தே
4 ஐந்தாம் வருட இறுதியில் ஐந்தொகைச் சுருக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) **S.S** நிறுவனம் 120000/= கிரயமான இயந்திரத்தை கொள்வனவு செய்தது பயன்படு ஆயுட்காலம் 10 வருடம் இழிவுப் பெறுமதி 20000/= 5 ம் வருட ஆரம்பத்தில் இயந்திரத்தின் ஆயுட்காலம் இன்னும் இரண்டு வருடங்களாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது இழிவுப் பெறுமதியில் மாற்றம் இல்லை

1 ஓராம் வருடத்திற்கான பெ.தேய்வு

2 ஐந்தாம் வருடத்திற்கான பயன்படு பெறுமதி

3 ஐந்தாம் வருடத்திற்கான பெ.தேய்வு

4 ஐந்தாம் வருட இறுதியில் இயந்திரம் 35000/= க்கு விற்பனை செய்யப்படின்

அ விற்பனை தொடர்பான நாட்குறிப்பு பதிவு

ஆ தேவையான பேரேட்டுக் கணக்குகள்

7) சங்கர் நிறுவனத்தின் 1.10.99 ல் 200000/= கிரயமான கணணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது பயன்படு ஆயுட்காலம் 8 வருடங்கள் இழிவுப் பெறுமதி 10000/= இப் பொறியானது 1. 4. 02 ல் இன்னும் இரண்டு வருடங்களே பயன்படுத்தப்படும் எனஎதிர்பார்க்கப் படுகின்றது இழிவுப் பெறுமதி 20000/= இருக்கும் நிறுவனம் 31 மார்ச்சில் கணக்கு முடிப்பது வழக்கம்

1 ஆண்டுக்கான பெ.தேய்வு

2 31 மார்ச் முடிவடைந்த ஆண்டுக்கான பெ.தேய்வு

3 31. 3. 03 ம் ஆண்டுக்கான பெ.தேய்வும் ஐந்தொகைச் சுருக்கமும்

4 31.12.03 ல் இவ் இயந்திரம் 40000/= விற்பனை செய்யப்படின்

அ விற்பனை தொடர்பான பேரேட்டுக் கணக்குகள்

ஆ விற்பனை தொடர்பான நாட்குறிப்புப் பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) நிர்மலா நிறுவனம் 1. 1. 00 ல் 100000/= கிரயமான பொறி ஒன்றை கொள்வனவு செய்தது பயன்படு ஆயுட் காலம் 6 வருடங்கள் இழிவுப்பெறுமதி 10000/= 1.1.03 ல் இருந்து இப்பொறியின் ஆயுட்காலம் மேலும் இரண்டு வருடங்களாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

1 ஆண்டுக்கான பெ.தேய்வு

2 31.12.00ல் முடிவடையும் ஆண்டுக்கான பெ.தே. அளவு

3 31.12.03ம் ஆண்டுக்கான பெ.தே. அளவு

4 31.12.03ம் ஆண்டுக்கான ஐந்தொகைச் சுருக்கம்

5 30.9.04ல் இப் பொறியானது 290000/= விற்பனை செய்யப்படுமாயின் விற்பனை தொடர்பான பேரேட்டுக் கணக்குகள்

9) 1.1.00 ல்200000/= கிரயமான இயந்திரம் ஒன்றை வரையறுக் கப்பட்ட அஜந்தன் நிறுவனம் கொள்வனவு செய்தது இழிவுப் பெறுமதி 20000/= நிறுவனம் 1.4.02 ல் இதன் வினைத்திறனை அதிகரிப்பதற்காக 25000/= திருத்தம் ஒன்றை மேற்கொண்டது மேலும் இவ் இயந்திரத்தில் 30000/= பகுதி ஒன்றை கழற்றி மீண்டும் பொருத்துவதற்கு 31.12.02 ல் செலவு செய்தது மேலும 1.1.04 ல் இதன் வினைத்திறனை அதிகரிப்பதற்காக 20000/= செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.இழிவுப் பெறுமதியில் எவ்வித மாற்றமும் இல்லை 31..3 ல் க/கு முடிக்கப்படும் 10% சேமிக

1 ~~எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் யாது?~~

2 இயந்திரம் வாங்கப்பட்டதில் இருந்து 31.3.04 வரையான பொறிக் க/கு பொறி பெ.தே ஏ க/கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) வரையறுக்கப்பட்ட மன்மதன் நிறுவனம் 1.10.00 ல் 200000/= கிரயமான பொறியைக் கொ/வு செய்தது. 1.1.02 ல் மேலும் 150000/= கிரயமான பொறி ஒன்றை கொ/வு செய்தது. இப் பொறியை கொ/வு செய்யும் போது 10000/= திருத்துதல் செலவு ஒன்று ஏற்பட்டது 1.4.02 ல் 15000/= திருத்துதல் வேலைசெலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இப் பொறிகளின் வெளியீட்டு மட்டத்தை அதிகரிப்பதற்காக 60000/= செலவில் 1.10.02ல் சில மோட்டார்கள் இணைக்கப்பட்டது 1.1.04 ல் பொருத்தப்பட்ட மோட்டாரில் பழுது இருந்தமையினால் 5000/= செலவில் திருத்தப்பட்டது. பெ.தேய்வு கிரயத்தில் 10% 01.04.00- 31.03.04 வரையான பொறி க/கும் பொறி பெ.தே.ஏ க/கும்.

11) வரையறுக்கப்பட்ட கில்லி நிறுவனம் 1.10.99 ல் ஒவ்வொன்றும் 200000/= கிரயமான 2 பொறிகளை கொ/வு செய்தது ஒவ்வொன்றுக்கும் கொண்டு வரும் செலவாக 20000/= பொருத்துதல் செலவாக 30000செலவுசெய்யப்பட்டது. 01.01.01 ல் 100000 கிரயமான வேறோர் பொறி கொ/வு செய்யப்பட்டது. 31.12.01 ல், 01.10.99 கொவுசெய்யப்பட்ட பொறி ஒன்று ஒன்று 90000/= வி/னைசெய்யப்பட்டது. மேலும் 01.07.03 ல் 150000/= கிரயமான பொறி ஒன்று கொ/வு செய்யப்பட்டு 30000/= செலவில் பொருத்தப்பட்டது. பெ.தேய்வு கிரயத்தில் 15%.

1 31.3.00 -04 வரையான பின்வரும் க/கு கள்
   - பொறி க/கு
   - பொறி பெ.தே.ஏ. க/கு
   - பொறி வி/னை க/கு
   - பொறி பெ.தே க/கு

2 31.3.04 ல் ஐந்தொகைச் சுருக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) வரையறுக்கப்பட்ட அனித்தா நிறுவனத்தின் 1.1.04 ல் காணப்பட்ட பொறி தொடர்பான தகவல்கள்.

| கொ/வு திகதி | கிரயம் |
|---|---|
| 1 31.12.98 க்கு முன் கொ/வு செய்யப்பட்டவை | 200000/= |
| 2 1999 ல் கொ/வு செய்யப்பட்டவை | 150000/= |
| 3 2000 ல் கொ/வு செய்யப்பட்டவை | 210000 /= |
| 4 2001 ல் கொ/வு செய்யப்பட்டவை | 160000/= |
| 5 2002 ல் கொ/வு செய்யப்பட்டவை | 250000/= |
| 6 2003 ல் கொ/வு செய்யப்பட்டவை | 170000/= |

31.12.04 ஆண்டு இடம்பெற்ற பொறி தொடர்பான கொடுக்கள் வாங்கல்கள்.

| பொறிஇல | கொ/வுதிகதி | வி/னைதிகதி | கொள்விலை | வினைவிலை |
|---|---|---|---|---|
| A 1 | 10.10.98 | 20.12.04 | 50 000 | 20 000 |
| A 2 | 07.08.99 | " | 60 000 | 35 000 |
| X 1 | 5.5.00 | " | 40 000 | 30 000 |
| LL1 | 7.7.01 | " | 30 000 | 20 000 |
| A3 | 6.3.02 | " | 60 000 | 50 000 |
| X.X1 | 12.12.03 | " | 20 000 | 15 000 |
| X 2 | 10.3.04 | " | 100 000 | 100 000 |
| X 3 | 10.10.04 | - | 150 000 | --- |

நிறுவனம் ஆண்டு ஆரம்ப மீதி முறையில் 20% தேய்விடும் 31.3.04 ம் ஆண்டில் முடிவடைந்த ஆண்டுக்கான

பொறி க/கு பொறி பெ.தே.க/கு

பொறி வி/னை க/கு ஐந்தொகைச் சுருக்கம் 31.12.04

குறிப்பு:- பெ.தே. தொடர்பான கணிப்புக்கள் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) வரையறுக்கப்பட்ட சிந்துநிறுவனத்தின் 31.3.03 ல் காணப்பட்ட இயந்திரம் தொடர்பான தகவல்கள்

| | |
|---|---|
| 31.3.99 க்கு முன் காணப்பட்டவை | 250 000 |
| 1999-2000 கொ/வு | 300 000 |
| 2000-2001 கொ/வு | 200 000 |
| 2001-2002 கொ/வு | 210 000 |
| 2002-2003 கொ/வு | 240 000 |

31.3.04 ல் இயந்திரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

| இயந்திரஇல | கொ/வுதிகதி | வி/னைதிகதி | கொள்விலை | வினைவிலை |
|---|---|---|---|---|
| BB1 | 1.1.99 | 15.3.04 | 60 000 | 25 000 |
| BB5 | 5.5.99 | 15.3.04 | 80 000 | 50 000 |
| BB12 | 7.8.00 | 15.3.04 | 70 000 | 20 000 |
| BB20 | 1.1.02 | 15.3.04 | 55 000 | 30 000 |
| BB22 | 31.12.02 | 15.3.04 | 45 000 | 32 000 |
| BB25 | 1.10.03 | --- | 140 000 | ---- |
| BB28 | 1.1.04 | 15.3.04 | 110 000 | 90 000 |

பெறுமான தேய்வு வருட இறுதி முறையில்( கொ/வு) செய்யப்படும் ஆண்டில் பெ.தே. வி/னை செய்யப்படும் ஆண்டில் பெ.தே. இல்லை)

31.3.04 ம் ஆண்டுக்கான

இயந்திர க/கு

இயந்திர பெ.தே.ஏ க/கு

இயந்திர வி/னை க/கு

ஐந்தொகைச் சுருக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) வரையறுக்கப்பட்ட AMT நிறுவனத்தின் 31.3.03 இல் காணப்பட்ட

மோட்டார் வாகனங்களின் மீதி 1260 000/=

பெ. தே. ஏ 5100000/=

நிறுவனம் 31.3.04 ல் முடிவடைந்த ஆண்டில் கொ/வு முடிவுறுத்தல் தொடர்பான விபரம்.

1.1.98 ல் 1000000 கொ/வு செய்யப்பட்ட மோ.வாகனம் 31.12.03 20000/= வி/னைசெய்யப்பட்டது. மேலும் 1.1.01ல் 1200000/= கொ/வு செய்யப்பட்ட மோ. வாகனமும் 31.12.03 ல் 800000/= வி/னை செய்யப்பட்டது

அத்துடன் வி/னை செய்யப்பட்ட திகதியிலேயே 3000000/= கிரயமான மோ. வாகனம் கொ/வு செய்யப்பட்டது

மோட்டார் வாகனம் கிரயத்தில் 12%.

1 31.3.04ம் ஆண்டில் முடிவடைந்தஆண்டுக்கான

மோ. வாகன க/கு

மோ.வாகன பெ.தே.ஏ.க/கு

மோ. வி/னை க/கு தனித்தனியே

ஐந்தொகைச் சுருக்கம்

15) 31.3.04 ம் ஆண்டுக்கான பரீட்சை மீதி JJ நிறுவனத்தின்

பொறித் தொகுதி 10000000

பெ.தே.ஏ 4500000

நிறுவனம் 1.1.99 ல் 1500000 கொ/வு செய்த பொறியை 7500000 க்கும், 1.1.02ல் 1000000 கொ/வு செய்யப்பட்ட பொறியை 800000க்கு 31.12.03 வி/னை செய்யப்பட்டது. வி/னை வரும்படி காசுக்க/கில் இருந்து மோட்டார் க/கில் செலவு வைக்கப்பட்டிருந்தது

31.3.04 ம் ஆண்டுக்கான பொறி க/கு

பொறி பெ.தே.ஏ க/கு

பொறி வி/னை க/கு

ஐந்தொகைச் சுருக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16) X நிறுவனத்தின் பொறி தொடர்பான தகவல்கள் பொறிஇல

| பொறியின்இல | கிரயம் | கொ/வுதிகதி | இ.பெறுமதி | ஆயுட்காலம |
|---|---|---|---|---|
| J25 | 400 000 | 01.07.00 | 40 000 | 6 |
| J50 | 300 000 | 01.10.01 | --- | 10 |
| J100 | 600 000 | 01.01.00 | 50 000 | 11 |

1) ஒவ்வொரு பொறிக்குமான ஆண்டுகளுக்காக செய்ய வேண்டிய தொகையை மதிப்பிடுக.

2) நிறுவனம் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31 ல் முடிவுக் க/குகளை தயாரிக்கின்றது.எனின் 31.12.02 ஆண்டுக்கான இலாப நட்ட க/குமாற்ற வேண்டிய பெ.தே (தனித்தனியே)

3) 01.01.04 ல் பொறி தொடர்பான அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அ பொறி J25 இன்னும் 2 வருடங்களே பயன்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆ J50 இன் ஆயுட்காலம் இத்திகதியில் இருந்து 10 வருடங்களாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இ J100 எந்தவித பயன்பாடு அற்றதாக முற்றாக மதிப்பிழந்தது.

**வே.ப:-** 31.12.04 ஆண்டின் மாற்றப்படும் இலாப நட்ட உருப்படிகளும் ஐந்தொகைச் சுருக்கமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17)** Y நிறுவனத்தின் 31.03.03 ல் காணப்பட்ட பொறி தொடர்பான தகவல்கள் வருமாறு.

| பொறிஇல | பொறியின்கிரயம் | கொ/வுதிகதி | இ.பெறுமதி | ஆயுட்காலம் |
|---|---|---|---|---|
| B1 | 500 000 | 1.10.00 | 20 000 | 10 |
| B2 | 400 000 | 1.4.01 | 30 000 | 8 |
| B3 | 700 000 | 1.10.01 | ------ | 8 |
| B4 | 1000 000 | 1.4.02 | 90 000 | 7 |

1.4.03 ல் பின்வரும் அ/தி செயற்பாடு மேற்க்கொள்ளப்பட்டது

1 B1 பொறி எந்தவித பயன்பாடும் அற்றதாக 25000/= விற்பதாக எதிர்பார்க்கப்படும்.

2 B2 பொறி இன்னும் 2 வருடங்களே பாவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

3 B4 ஆயுட்காலம் மேலும் 2 வருடங்களால்அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

4 இழிவுப் பெறுமதி 80000/=ஆக இருக்கும்

வே. ப:- 31.3.03 ம் ஆண்டு இலாப நட்ட க/கு மாற்றப்பட்ட தொகையும் ஐந்தொகைச் சுருக்கமும்.

---

**18)** வரையறுக்கப்பட்ட அறிவு நிறுவனம் 1.1.01. ல் 100000/= பெறுமதியான இயந்திரம் ஒன்றை கொ/வு செய்தது. இதற்கு கிரயத்தில் 16% பெ.தேய்வு செய்து வந்தது. 01.04.03 ல் இருந்து நிறுவனம் பெ.தே முறையில் ஒடுங்குபாக முறையில் 20% மாக தேய்விட தீர்மானித்தது.

31.3.04 ல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்ட க/குக்கு மாற்ற வேண்டிய தொகையும்
ஐந்தொகைச் சுருக்கமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19)** சதீஸ் நிறுவனம் 1.10.00 200000/= பொறி ஒன்றை கொ/வு செய்தது பெ.தேய்வுக் கிரயத்தில் 12% தேய்விடும்.01.04.03ல் இருந்து பெ.தே குறையும் மீதி முறையில் 15%தேய்விட தீர்மானித்தது. 31.3.04 ல் இலாப நட்ட க/குக்கு மாற்ற வேண்டிய உருப்படியும் ஐந்தொகைச் சுருக்கமும்.

20) 1.10.00 ல் 400000/= கிரயமான மோ.வாகனம் ஒன்று கொ/வு செய்தது. நிறுவனம் ஒடுங்குபாக முறையில்20%தேய்விடுதல் வழக்கம் ஆனாலும் 01.07.03ல் பெ.தே. முறையை நேர்கோட்டு முறையில் 10% தேய்விட தீர்மானித்தது 30.6.04 ல் முடிவடைந்த ஆண்டுக்கான இ/நட்ட ஐந்தொகைச் சுருக்கம்

21) சாயி நிறுவனம் 01. 01. 01 ல் 250000/= கிரயமா கணணிகளை கொ/வு செயதது. பெ.தே குறையும் நிலையில் 25% 01.07.03ல் இருந்து பெ. தே முறையை கிரயத்தில் 15% தேய்விட தீர்மானித்தது

22) X நிறுவனம் 100000/= பொறியை கொ/வு செய்தது பொறியின் பயன்பாடு ஆயுட்காலம் 5வருடம் இழிவுப் பெறுமதி 32868/= நிறுவனம் ஒடுங்குபாகமீதி முறையில் தேய்விடுகின்றது.

1 வருடாந்த பெ. தே வீதம்.

2 2ம் வருட பெ.தே தொகை.

23) கீர்த்தனா நிறுவனம் 01.01.04ல் 100000/= , 150000/= பெறுமதியான 2 பொறிகளை கொண்டிருந்தது. அத்திகதியில் பெ.தே ஏ முறையே 40000/= 50000/= ஆகும். இதில் 1வது பொறியானது 70000/= 30.06.04 வி/னை செய்யப்பட்டது.பெ.தே கிரயத்தில் 20% 31.12.04ல்

அ) பொறி க/கு ஆ) பொறி பெ.தே.ஏ க/கு

இ) பொறி வி/னை க/கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24) சாந்தினி நிறுவனத்தின் 01.04.03 ல் பொறி தொடர்பான மீதிகள் முறையே 190000/= , 270000/= இத்திகதி யில் பெ.தெ.ஏ முறையியே 6,00,00./= 80000/= இதில் இரண்டாவது பொறி நந்தினிக்கு 200000/= 30.09.03 வி/னை செய்யப்பட்டது. அத்துடன் 01.01.04ல் புதிய பொறி ஒன்று 100000/= கொள்வனவு செய்யப்பட்டது கிரயத்தில் 12%

**31.03.2004 ல் தேவையான பேரேட்டு கணக்குகளும் நாட்குறிப்பு பதிவுகளும்**

25) ராகுல் நிறுவனத்தில் 01.01.2004 ல் 180000/= 250000/= பெறுமதியான 2 இயந்திரங்கள் காணப்பட்டது.அத்திகதி யில் பெ.தே.ஏ 60000/= ,80000/= ஆகும். இதில் 1வது பொறி 850000/= 30.09.04 இல் வி/னை செய்யப்பட்டது. பெ.தே புத்தகப்பெறுமதியில் 20% 30.12.04இல் தேவையான பேரேடுகள்

26) A நிறுவனத்தில் 1.4.03 இல் 290000/= ,400000 /= பெறுமதியானதும் 2 மோட்டார்கள் காணப்பட்டது. இத்திகதியில் பெ.தே.ஏ முறையே 110000/= ,160000/= ஆகும். இதில் முதலாவது பொறி 98000/= 01.10.03இல் விற்பனை செய்யப்பட்டது. அத்துடன் 01.01.04ல் புதிய மோட்டார் 200000/= கொள்வனவு செய்யப்பட்டடது. பெ.தே குன்றுபாக நிலுவை முறையில் 10%

31.03.04இல் தேவையான பேரேடுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27) வரையறுக்கப்பட்ட R நிறுவனத்தின் 31.3.04ன் பரீட்சைமீதி மோ. வாகனம் 750000 பெ.தே.ஏ 240000 மே.தகவல்:- 1.10.2000ல் 80000/= கொள்வனவு செய்யப்பட்ட மோ.வாகனம் 31.12.03ல் 60000/= இற்கு விற்பனைசெய்யப்பட்டது. விற்பனை காசுக்கணக்கில் வரவும் வி /னை காசுக்கணக்கில் செலவும் வைக்கப்பட்டது. பெ.தேகிரயத்தில் 10% இற்கு விற்பசைசெய்யப்பட்டது. விற்பகைகாசுக்கணக்கில் வரவும் வி /னை காசுக்கணக்கில் செலவும் வைக்கப்பட்டது. பெ.தே கிரயத்தில்10% 31.03.04ம் ஆண்டுக்கான **தேவையான பேரேட்டுக்கணக்கு.**

28) சாந்தன் நிறுவனத்தின் 31.3.04ல் பரீட்சை மீதி
மோட்டார் வாகனம் 675000
பெ.தே ஏ 245000

1.1.2000ல் 100000/= கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் ஒன்று 30.6.03ல் 50000/= ற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனை வரும்படி காசுக்கணக்கிலிருந்து மோட்டார் கணக்கில் செலவுவைக்கப்பட்டிருந்தது. அத்துடன் புதிய மோட்டார் ஒன்று 70000/=ற்கு விற்பனை செய்யப்பட்ட திகதியில் கொள்வனவு செய்யப்பட்டது. கொள்வனவு தொடர்பாக உரிய பதிவுகள் இடம்பெற்றது.பெ. தே கிரயத்தில் 15

1 **தேவையான பேரேட்டுக்கணக்குகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29) வரையறுக்கப்பட்ட கண்ணன் நிறுவனத்தின் 30.6.04ல் பரீட்சை மீதி

| | | |
|---|---|---|
| பொறி | 815000 | |
| பெ.தே.ஏ | | 361000 |

01.10.2000ல 120000/= கொள்வனவுசெய்யப்பட்ட பொறி ஒன்று 01.01.04ல் 80000/= ற்கு விற்பனை செய்யப்பட்டது. வி/னை வரும்படி காசுக்கணக்கில் வரவில்வைக்கப்பட்டு பொறிக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் 1.04.04ல் புதிய பொறி ஒன்று 100000/= ற்கு கொள்வனவு செய்யப்பட்டது. இது தொடர்பாக காசுக்கணக்கில் இருந்து கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. பெ.தே கிரயத்தில் 20%

30.06.04ல் **தேவையான பேரேடுகள்**

**30)** வரையறுக்கப்பட்ட S.S நிறுவனத்தின் 31.12.04ல் பரீட்சை மீதி

| | | |
|---|---|---|
| இயந்திர சாதனங்கள் | 740000 | |
| பெ.தே.ஏ | | 220000 |

01.10.2000ல் 60000/= கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் 1.7.04ல் 40000/=ற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனை வரும்படியில் இருந்து காசுக்கணக்கில் இருந்து இயந்திரக் கணக்கில் செலவுவைக்கப்பட்டது. பெ.தேய்வு ஏட்டுப்பெறும தியில் 20%

31.12.04ல் **தேவையான பேரேடுகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31) வரையறுக்கப்பட்ட **N.N** நிறுவனத்தின் 31.03.04ல் பரீட்சை மீதி

மோ வாகனம் 660000

பெ.தே.ஏ 215000

01.01.01ல் 80000/= ற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோவாகனம் 31.12.03ல் 50000/= ற்கு விற்பனைசெய்யப்பட்டது. இதுதொடர்பாக பெற்ற காசு காசுக்கணக்கிலிருந்து மோட்டார் கணக்கில் செலவு வைக்கப்பட்டது. அத்துடன் 1.1.04ல் 100000/= கிரயமான மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது. உரியபதிவுகள் இடம்பெற்றது. பெ.தே வீதம் ஒடுங்குபாகமுறையில்10%

**01.03.04ல் தேவையான பேரேடுகள்**

32) வரையறுக்கப்பட்ட வேந்தன் நிறுவனத்தின் 30.06.04ல் பரீட்சை மீதி

இயந்திரசாதனம் 710000

பெ.தே.ஏ 190000

01.04.01ல் 60000/= ற்கு கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரமொன்று 30.06.04ல் 40000/= ற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனை வரும்படி காசுக்கணக்கிலிருந்து விற்பனைக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும் 01.01.04ல் 50000/=ற்கு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. இது தொடர்பாக காசுக்கணக்கிலிருந்து கொள்வனவுக்கணக்கில் பதிவு செய்யப்பட்டது. ஒடுங்குபாக முறையில் 20% தேய்விடுக.

**30.06.04ல் தேவையான பேரேடுகள்**

33) நசீர் நிறுவனத்தின் 31.03.04ல் பரீட்சை மீதி

கணணி 800000

பெ.தே .ஏ 200000

நிறுவனம் 1.10.03ல் 60000/= ஏட்டுபெறுமதியுடையது 100000/= கிரயமான கணணியை 70000ற்கு விற்பனை செய்தது விற்பனை வரும்படி காசுக் கணக்கிலிருந்து கணணி கணக்கில் வரவு வைக்கப்பட்டது. அத்துடன் அத்திகதியில் புதிய கணணிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. பெ.தே கிரயத்தில் 15%

**31.03.04ல் தேவையான பேரேடுகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34) Y நிறுவனத்தின் 31.03.04 ல் பரீட்சை மீதி

மோட்டார் வாகனம் 1150000

பெ.தே.ஏ 400000

01.01.01ல் 100000/= கொள்வனவு செய்யப்பட்ட மோ. வாகனம் 31.12.03ல் 60000 மதித்து கொடுத்து மீதி காசாக கொடுத்து புதிய மோட்டார் ஒன்று 95000/= இற்குகொள்வனவு செய்யப்பட்டது . கொடுக்கப்பட்ட காசுக்கு மாத்திரம் காசுக்கணக்கிலிருந்து மோட்டார் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

பெ.தே கிரயத்தில்20%

**31.03.04 தேவையான பேரேடுகள்**

35) அறிவு நிறுவனத்தின் 30.06.04ல் பரீட்சை மீதி

இயந்திரங்கள் 825000

பெ. தே. ஏ 230000

01.10.01 ல் 80000/= கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் 31.03.04ல் பகுதியாக கொடுத்து 60000/= காசு கொடுத்து 150000/= புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. கொடுக்கப்பட்ட காசுக்கு காசுக் கணக்கிலிருந்து ஏனைய செலவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. பெ.தே ஒடுங்குபாக முறையில் 20%

**30.06.04ல் தேவையான பேரேட்டுக் கணக்கு**

36) N நிறுவனத்தின் 31.03.04ல் பரீட்சை மீதி

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | 420000 | 150000 |
| பொறித்தொகுதி | 750000 | 250000 |

1. 01.01.01ல் 80000/=ற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் 31.12.03ல் 50000/=ற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனை வரும்படி காசுக்கணக்கிலிருந்து விற்பனை கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் விற்பனை செய்யப்பட்ட திகதியிலேயே 60000/= கிரயமான மோ. வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. உரிய பதிவு இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 01.10.2000ல் கொள்வனவு செய்யப்பட்ட 100000/= கிரயமான பொறி ஒன்று 30.06.03ல் 75000/= விற்பனை செய்யப்பட்டது. விற்பனை வரும்படி காசுக்கணக்கிலிருந்து பொறிக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் அன்றய தினமே புதிய பொறி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. 60000/= கிரயமானது காசுக்கணக்கிலிருந்து கொள்வனவுக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது . பெ.தேய்வு ஆண்டு ஆரம்ப மீதி முறையில் கிரயத்தில் மோட்டார் 15% , பொறி 20%

**37)** ரவி நிறுவனத்தின் 30.06.04ல் பரீட்சை மீதி

| | | |
|---|---|---|
| பொறி | 800000 | 240000 |
| மோ.வாகனம் | 400000 | 150000 |

1. 01.01.00ல் 50000/= கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் 30000/= 02.02.04ல் விற்பனை செய்யப்பட்டது விற்பனை வரும்படி காசுக்கணக்கிலிருந்து மோட்டார் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அத்துடன 05.03.04ல் 70000/= மோட்டார் கொள்வனவு செய்யப்பட்டது. உரிய பதிவுகள் இடம்பெற்றது.

2. 07.07.01ல் 100 000கொள்வனவு செய்யப்பட்ட பொறி 15.10.2003ல் 70000/= விற்பனை செய்யப்பட்டது. விற்பனை வரும்படி காசுக்கணக்கிலிருந்து விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது. அத்துடன் 60000/= பொறி ஒன்று 10.01.2004ல் கொள்வனவு செய்யப்பட்டது. இது தொடர்பாக காசுக் கணக்கிலிருந்து கொள்வனவுக் கணக்கில் பதியப்பட்டது.

3. ஆண்டு ஆரம்ப மீதி முறையில் மோட்டார் 10% கிரயம் , பொறி 12% கிரயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38) 31.03.2004ல் ஓநிறுவனத்தின் பரீட்சை மீதி

பொறித்தொகுதி 950000

பெ.தே.ஏ 280000

07.07.2000 ல் 150000/= கொள்வனவு செய்யப்பட்ட பொறி 10.01.04ல் 100000/= விற்பனை செய்யப்பட்டது. விற்பனை வரும்படி காசுக்கணக்கிலிருந்து பொறிக்கணக்கில் செலவு வைக்கப்பட்டது. அத்துடன் புதிய பொறி ஒன்று 20.02.04ல் 120000/= கொள்வனவு செய்யப்பட்டது.உரிய பதிவுகள் இடம்பெற்றது. பெ.தே வருட இறுதி முறையில் 15% தேய்விடப்படும்

31.03.04ல் தேவையான பேரேடுகள்.

39) வரையறுக்கப்பட்ட நந்தினி நிறுவனம்

மோ.வாகனம் 676000

பெ.தே.ஏ 315000

15.10.2000ல் 80000ற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் 25.02.2004ல் 50000/= மதித்து கொடுத்தும் மீதி காசாக கொடுத்தும் 100000/=விற்கு புதிய மோட்டார் கொள்வனவு செய்யப்பட்டது. கொடுக்கப்பட்ட காசுக்கு உரிய பதிவுகள் இடம்பெற்றது. பெ.தே வருட இறுதி மீதி முறையில் 20%.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40)

அ 2003.3.31 ல் முடிவுற்ற ஆண்டுக்கு பாத்திய வியபாரிகளின் நிதிக்கூற்றிலிருந்து பெயாத்தெடுக்கப்பட் நிலையான சொத்துக்கள் சார் குறிப்புப் பின்வருமாறு:

| நிலையான சொத்துக்கள் கிரயம் | 02.04.01 ல் இருந்தபடி | கூட்டப்பட்டவை | முடிவு செய்தல் கிரயம் | 03.03.31ல் இருந்தபடி |
|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| மோட்டார். வா | 1500 | 300 | - | 1800 |
| | 600 | 150 | (80) | 670 |
| பொறித.'.தொ | 2100 | 450 | (80) | 2470 |

| பெறுமானத் தேய்வு மீதி | 02.04.01 ல் இருந்தபடி தாக்கல் | ஆண்டுக்கு செய்த -க்கு | முடிவு செய்தலு மீதி | 03.3.31ல் இருந்தபடி |
|---|---|---|---|---|
| | ரூ.000 | ரூ.000 | ரூ.000 | ரூ.000 |
| மோட்டாாவாக | 900 | 360 | - | 1260 |
| பொறித்.தொ | 120 | 75 | (16) | 179 |
| | 1020 | 435 | (16) | 1439 |

பிற தகவல்கள்

1 பொறித்தொகுதியின் விற்பனை மீதான இலாபம் 11000/= ஆக இருந்தது.

2 ஆண்டுக் காலத்தில் நிலையான சொத்துக்களுக்குக் கூட்டப்பட்டவை அனைத்தும் 2002.04.01ந் திகதி அன்று கொள்வனவு செய்யப்பட்டவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) 03.03.31ல் முடிவுற்ற ஆண்டிற்குப் பின்வரும் கணக்குகளை அவை பேரேட்டில் காணப்படுகின்றவாறு தயாரிக்கவும்.

1) மோட்டார் வாகனங்கள் கணக்கு
2) பொறித்தொகுதிக்கணக்கு
3) மோட்டார் வாகனங்கள் தொடர்பில் பெ.தே.ஏகணக்கு
4) பொறித்தொகுதிகள் தொடர்பில் பெ.தே.ஏ கணக்கு
5) பொறித் தொகுதி முடிவு செய்தற் கணக்கு

2) கம்பனி 02.04..01ம் திகதி தொடக்கம் ,பெ. தே செய்யும் முறையைதற்போதைய முறையிலிருந்து ஆண்டொனறுக்கு 20% படி ஒடுங்குபாக மீதி முறைக்கு மாற்றத்தீர்மானித்துள்ளது எனக்கருதி 03.03.31ல் முடிவுறும் ஆண்டுக்கான இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்படவேண்டிய ,மோட்டார் வாகனங்கள் மீதான பெ.தேய்வை கணிக்கவும்.

3) பெறுமானத் தேய்வு தொடர்பாக நிதிக்கூற்றில் இடம்பெற பேற வேன்டிமேற்குறித்தஇருவெளிப்படுத்தல்கள் தவிர இரு வெளிப்படுத்தல்கள்

42) 2000.01.01ந் திகதி அன்று சம்பத் என்பவர் சம்பத் பிரசுரிப்பாளர்கள் எனும் பெயரில் அச்சிடும் வணிகமொன்றைத் தொடங்கினார். வணிகத்திற் பயன்படுத்தப்பட்ட பொறித் தொகுதிகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| உருப்படி | கிரயம் ரூபா | கொள்வனவு திகதி | எஞ்சிய (இறுதி) பெறுமதி ரூபா | பயன்படு ஆயுட்காலம் ஆண்டுகள் |
|---|---|---|---|---|
| அச்சிடும் பொறி | 180000 | 2000.01.01 | 30000 | 10 |
| அச்சுக்கோத்-தற் பொறி | 60000 | 2000.01.01 | -- | 05 |
| வெட்டும்பொறி | 75000 | 2000.06.30 | 5000 | 07 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பத் பிரசுரிப்பாளர்கள் பொறித் தொகுதியை நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யத் தீர்மானித்துள்ளது. அவர்களது நிதியாண்டு ஒவ்வோர்ஆண்டும் டிசம்பர் 31 ஆந் திகதியன்று முடிவுறும்.

கைத்தொழிலழலான தொழில் நுணுக்க மாற்றங்கள் காரணமாக 2001 1ம் மாதத்தின் தொடக்கத்தில் கம்பனி பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றியது.

1 125/= எனும் கிரயத்தில் அச்சிடும் பொறியின் மீது முழுமையான புதுப்பித்தல் வேலை மேற்கொள்ளப்பட்டது. இப்புதுப்பித்தல் காரணமாக அச்சிடும் பொறியின் பயன்படு ஆயுட்காலம் 2001.01.01 ந் திகதியிலிருந்து 12 ஆண்டுகளுக்கு விரிவெய்தியது. இக்காலத்தின் முடிவின் எஞ்சிய பெறுமதி 50000/= ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டது.

2 அச்சுக்கோத்தற் பொறி வழக்கிழந்து போய்விட்டதெனத் தீர்மானிக்கப்பட்டது. அது மீள் விற்பனைக்கான பெறுமதி எதனையும் கொண்டிராததால் ஏடுகளிலிருந்து முழுமையாகப் பதிவழிக்கப்பட்டது.

3 வெட்டும் பொறி 20000/= எனும் தொகைக்கு விற்கப்பட்டது.

**வேண்டப்படுவது**

1 2000.12.31 ல் முடிவுற்ற ஆண்டுக்குப் பொறி ஒவ்வொன்றினதும் பெறுமானத் தேய்வு (தனித்தனியாக)

2 2000.12.31 ல் முடிவுற்ற ஆண்டுக்கு இலாப நட்டக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட மொத்தத் தொகை (பொறி ) ஒவ்வொன்றுக்குமான தொகையைத் தனித்தனியே காட்டுக.

3 2001ம் ஆண்டுக்கு வணிகத்தின் பின்வரும் பேரேட்டுக் கணக்குகள் வணிகம் பொறிகள் அனைத்துக்கும் தனியொரு பொறித் தொகுதிக் கணக்கை பேணி வந்தது.

1 பொறித்தொகுதிக் கணக்கு
2 பொறித்தொகுதியின் பெ.தே கணக்கு
3 பொறித்தொகுதியின் பெ.தே ஆன ஏற்பாட்டுக்கணக்கு
4 பொறித்தொகுதியை முடிவு செய்யும்கணக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43)

அ 1 பெ.தே. கணக்கீடு - இலங்கை கணக்கீட்டு நியமம் 8 க்கு அமைய ,பெ.தேய்விடக்கூடிய சொத் பெ.தேய்விட க்கூடிய தொகை ஆகியபதங்களை விளக்குக.

2 கிழே தரப்பட்டுள்ள தகவல்கள் சிறிலங்கா கம்பனியின் நிலையான சொத்துக்களுடன் தொடர்புடையதாகும் . ஒவ்வொரு வருடமும் இக் கம்பனியின் நிதி வருடம் டிசம்பர் 31 ல் முடிவுறுவதாகும்.

| நிலையான சொத்துக்கள் | கிரயம் ரூபா | கொள்வனவுத் திகதி | பெறுமானத் தேய்வு | |
|---|---|---|---|---|
| | | | வருடாந்தவீதம் | முறை |
| இயந்திரம் | 60 000 | 01.01.96 | 10% | நேர் கோட்டு முறை |
| பொறி | 900 000 | 01.01.97 | 10% | நேர்கோட்டு முறை |
| மோட்டார்வாகனங்கள் | 500 000 | 01.01.98 | 20% | குறைந்து செல் மீதி முறை |

2000 ம் ஆண்டு காலத்தினுள் கம்பனியை மீள் ஒழுங்கமைப் பதற்காக பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

1 2000.04.01 ல் 80000/= கிரயம் கொண்ட நவீன இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது இவ் இயந்திரமும் தற்போதையக் கொள்கையின் அடிப்படையில் 10% பெ.தேய்விடப்பட்டுள்ளது. 2000.7.1 ல் பழய இயந்திரமானது 30000/= க்கு விற்பனை செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 2000.1.1. ல் எஞ்சியிருக்கும் பொறியின் பயன்படு ஆயுட்காலத்தை மீள் பரிசீலிக்கப்பட்டு இது மூன்று வருடங்களாக இருக்க வேண்டும் என மதிப்பிடப்பட்டது.

3 2000.1.1 ல் மோட்டார் வாகனங்களுக்கான பெ.தே முறையானது நேர்கோட்டு முறைக்கு மாற்றப்பட்டுள்ளது இம் முறை 1.1.98 ல் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது இதன் நிர்ணயிக்கப்பட்ட புதிய வீதம் வருடாந்தம் 15% ஆகும். 2000 ஆம் ஆண்டுக்கான பெ.தே.கணக்கில்,இம் மாற்றங்கள் தொடர்பான சீராக்கங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

வேண்டப்படுவது:-

1 பின்வரும் ஒவ்வொரு சொத்துக்கள் தொடர்பாக2000.12.31 ல் முடிவடைந்த வருடத்திற்கான இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய பெ.தே தொகை (கணிப்பீடுகளை புறம்பாகக் காட்டுக).

i இயந்திரம் ii பொறி iii மோட்டார் வாகனங்கள்

2 2000 ம் ஆண்டுக்கான பின்வரும் பேரேட்டுக் கணக்குகள்

i இயந்திரக் கணக்குகள்
ii இயந்திரப் பெ.தே.ஆன ஏற்பாட்டுக் கணக்கு
iii இயந்திர விற்பனைக் கணக்கு

3 2000.12.31 ல் நிலையான சொத்துக்களுக்கான பெயர்த்தெடுக்கப்பட்ட ஐந்தொகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43) லக்ஷிகா கம்பனிக்கு சொந்தமான இரண்டு மோட்டார் வாகனங்களின் பின்வருமாறு

| மோட்டார் வாகனங்கள் | கொ/வு திகதி | கிரயம் (ரூபா) | எஞ்சிய பெறுமதி (ரூபா) | பயன்பாட்டு ஆயுட்காலம் (வருடங்கள்) |
|---|---|---|---|---|
| லொறி | 97.04.01 | 826 000 | 26 000 | 5 |
| மோட்டார் வான் | 98.01.01 | 980 000 | 20 000 | 4 |

மோட்டார் வாகனங்கள் நேர்கோட்டு முறையில் பெ. தேய்விடப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் கணக்காண்டு வருமானமானது மார்ச்.31ல் முடிவடைகின்றன98.03.31ஆம் திகதியில் கணக்குப்புத்தகங்களில் பின்வரும் மீதிகள் காணப்பட்டன.

மோட்டார் வாகனக்கணக்கு ரூபா 1 806 000

மோ/வாகனத்திற்கான பெ.தே.ஏ.க/கு ரூபா 220 000

**வேண்டப்படுவது:**

i 99.03.31 ம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான மோ.வா.ஆன பெ.தே தொகையை கணக்கிடுக.

ii 99.03.31 ம் திகதியில் மோ.வாகனங்களின் பெறுமதியானது எவ்வாறு ஐந்தொகையில் காட்டப்பட்டிருக்கும் என்பதைக் காட்டுக.

iii. மேலே தரப்பட்டுள்ள மோட்டார் வான் 2000.01.01 திகதி யில் 550000/= ற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது எனக்கருதி மோட்டார் வான் விற்பனை கணக்கை தயாரிக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**44)** அருணா கம்பனி 154000/= கொள்விலையான விநியோக வான் ஒன்றை கொ.ஃ.வு செய்தது. இவ்வாகனத்தின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் 5வருடங்களாகும். இவ்வாகனத்தின் எஞ்சிய பெறுமதி .4000/= கம்பனி வாகனங்களுக்கு நேர்கோட்டு முறையில் பெ.தேய்விட தீர்மானித்துள்ளது. இக்கம்பனி பெ.பேஏ கணக்கை பராமரிக்கின்றது.

**வேண்டப்படுவது:**

i வருடாந்த பெ.தே தொகையினை கணிப்பதுடன் அதற்கான நாடகுறிப்பு பதிவினை தருக.

ii பின்வரும் நடவடிக்கைகளை பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக. 3ஆம் வருட இறுதியில் மேற்படி வானை .90000/= பெறுமதியில் மதிப்பிட்டு வழங்கியும் காசாக 50000/= செலுத்தியும் புதிய லொறி ஒன்று வாங்கப்பட்டது.

**45)** வரையறுத்த செல்வன் கம்பனி வெளிநாட்டிலிருந்து இயந்திரம் ஒன்றை 1997.07. 0 150000/=ற்கு கொ.ஃ.வு செய்தது. இந்த இயந்திரத்திற்கு கேள்வு கட்டணமாக 20000/= சுங்கக்கட்டணம், கையாடல் செலவாக 13000/= ஏற்ப்பட்டது . நிர்மானச் செலவாக ரூ.8000 இருந்ததுடன் மேலும் 9000/= செலவானது. பரீட்சார்த்தஉற்பத்திக்காகசெய்யப்பட்டுள்ளது. இவ்வியந்திரம் மதிப்பிடப்பட்ட பாவனைக் காலமாக 5வருடங்களையும் எஞ்சிய பெறுமதியாக 15000/= னையும் கொண்டுள்ளது. 1997.07.01ல் இந்த இயந்திரமானது 20000/= கிரயத்தில் விருத்தி செய்யப்பட்டது. இதனால் இவ் இயந்திரதின் பாவனைக்காலம் இரண்டு வருடங்களால் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது எஞ்சிய பெறுமதி மாறுபடுமென எதிர்பார்க்கப்படவில்லை. பெ.தே நேர்கோட்டு முறை பாவித்து விதிக்கப்படும் .1998.06.30ல் முடிவடையும் 3ஆண்டுகளுக்கான பின்வரும் பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றீர்

1. இயந்திரக் கணக்கு
2. இயந்திரப் பெ. தே கணக்கு
3. இயந்திரப் பெ தே.ஏ கணக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46) வரையறுக்கப்பட்ட அனில் கம்பனி 70000/= பெறுமதியான வாகனமொன்றை கொள்வனவு செய்தது . வாகனததின் பயன்பாட்டுக்குரிய ஆயுட்காலம் 6வருடங்க ளென மதிப்பிடப்பட்டதோடு எஞ்சிய பெறுமானம் 10000/= எனவும் கொள்ளப்பட்டது. எனினும் இரண்டு ஆண்டுகளின் பின் வாகனத்தின் பயன்பாட்டுக்குரிய ஆயுள் இன்னும் 2ஆண்டுகள் மட்டும் என கணக்கிடப்பட்டது. வாகனமானது நேர்கோட்டு முறையில் பெ.தே உள்ளானது என கருத்திற் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i பெ.தே.கணக்கிற்கான ஏற்பாடுகளில் 2ம் ஆண்டு இறுதியில் தோன்றும் தொகை என்ன?

ii 2ம் ஆண்டு முடிவில் வாகனத்தின் பெ.தே மதிப்பென்ன?

iii 3ம் ஆண்டிற்கான பெ.தே பெறுமதி என்ன?

iv 3ம் ஆண்டின் முடிவில் வாகனம் .10000/= ற்கு விற்கப்பட்டால் இக்கொடுக்கல் வாங்கலின் மீதான இலாப நட்டம் என்ன?

v 4இல் கூறப்பட்டதற்கு நாட்குறிப்புப் பதிவுகள் எழுதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47) **அ)** ஒரு வியாபாரத் தாபனம் .160000/= ற்கு ஒரு பொறியைக் கொள்வனவு செய்தது. ஒடுங்கு மீதி முறையைப் பயன்படுத்தி அது 25% என்ற வீதத்தில் தேய்மானம் செய்யப்படும். அத்தீர்மானக்கணக்கிற்கு எதுவித ஏற்பாடும் பேணப்பட இல்லை.

i முதல் ஆண்டுக்கான தேய்மானத் தொகையை பதிவு செய்வதற்கான குறிப்பேட்டு பதிவை தருக.

ii 2 ஆண்டுகளுக்கு பின்னர், தேறிய ஏட்டுப் பெறுமானம் என்னவாக இருக்கும்?

iii எஞ்சிய 6 ஆண்டுகள் வாழ்நாட்களுக்கு நேர்கோட்டு முறை பொருத்தமாக அமையும் என்று அக்காலப் பகுதியின் இறுதியில் எஞ்சிய பெறுமானம் இராது என்றும் 2 ஆண்டுகளுக்குப் பின்னர் பணிப்பாளர்கள் தீர்மானித்தனர். 3ம் ஆண்டிற்கான தேய்மானத் தொகை என்னவாக இருக்கும்?

iv 1ம் ,2ம்,3ம் ஆண்டுகளுக்கான பொறிக் கணக்கைத் தயாரிக்குக?

**ஆ)** பின்வரும் அட்டவனணயில் தரப்பட்டுள்ள தகவல்களை பயன்படுத்தி பொறி முடிவுசெய்தல்க் கணக்கையும் மோட்டார் வாகன முடிவுசெய்தற் கணக்கையும் தயாரிக்குக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுகள் பற்றிய விபரங்கள்

| நிலையான சொத்துக்கள் | கிரயம் ரூபா | தேய்மானத்திற்கான ஏற்பாடு ரூபா | விற்பனை விலை ரூபா |
|---|---|---|---|
| பொறி | 75000 | 30000 | 40000 |
| மோட்டார் வாகனம் | 150000 | 90000 | 125000 |

48) (i) பின்வரும் அட்டவணையின் வெற்றிடங்களை நிரப்புக

| சொத்துக்கள் | கொள்விலை ரூபா | தே/ஏற்பாடு ரூபா | வி/னை விலை ரூபா | வி/னையில் இலா/நட் |
|---|---|---|---|---|
| ரூபா | | | | |
| பொறித்-தொகுதி | 20000 | 5000 | 6000 | ................. |
| மோட்டார்-வாகனம் | .................. | 18000 | 10000 | 4000 இலா |
| தளபாடம் | 6000 | .................. | 3000 | 2000 நட்ட |
| அலுவலக சாதனம். | 8000 | 2000 | .......... | 1000இலா |

(ii) 50000/= தொகைக்கு வாங்கப்பட்ட ஒரு சொத்து வேறுபட்ட தேய்மானமுறைகளைப் பயன்படுத்தித் தேய்மானம் செய்யப்பட்டது இவ்வாறு 1 ம், 2 ம் ஆண்டுகளின் இறுதியில் கணிக்கப்பட்ட தேய்மானங்கள் கீழே தரப்பட்டுள்ளன. தேய்மானத்தைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முறை ஒவ்வொன்றையும் பெயரிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | 1 ம் ஆண்டு ரூபா | 2 ம் ஆண்டு ரூபா |
|---|---|---|
| அ) ஆண்டொன்றுக்கு 10 ச.வீ படி | 5 000 | 5 000 |
| ஆ) ஆண்டொன்றுக்கு 20 ச.வீ படி | 10 000 | 8 000 |
| இ) ஆயுட்காலம் 4ஆண்டுகளாக எடுக்கப்பட்டது | 20 000 | 15 000 |
| ஈ) ஆயுட்காலம் 4லு ஆண்டுகளாகவும், முதலீட்டின் மீதான வட்டி 10ச.வீ ஆகவும் எடுக்கப்பட்டது | 10 776 | 10 776 |

49) அ) பின்வருவனவற்றை வரையறுக்குக.

i ஐயகடன்களுக்கான ஏற்பாடு.

ii கடன்பட்டோர் மீது கழிவீட்டுக்கான ஏற்பாடு.

ஆ) திரு எஸ். சில்வா என்பவர் 1987.01.01 ந் திகதி அன்று வணிகமொன்றைத் தொடங்கினர். 1987 ம் ஆண்டில் இறுதியில் 50000/= வியாபாரக் கடன்பட்டோர் பெறுமானமாக இருந்தது. இராமநாதனின் 1000/= ஆகிய தொகையை அறவிடமுடியக் கடனாகப் பதிவழிக்கவும் ஆண்டின் இறுதியிலான கடன்பட்டோரின் 5% ஐயக்கடனுக்கு ஏற்பாடொன்றைச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

1987.12.31 ல் இருந்தபடி வணிகத்தின் கடன்பட்டோர் தொகை 80000/= ஆகும்.

இக்கடன்களை பரீசிலிதததன் பின் 3200/= ஆகிய தொகையை அறவிடமுடியக்கடன்களாக பதிவழிக்க தீர்மானிக்கப்பட்டது. 1987 ம் ஆண்டில் பதிவழிக்கப்பட்ட இராமநாதனின் கடனான 1000/= ஆனது 1988 ல் பெற்றுக் கொள்ளப்பட்டது. 1988 ம் ஆண்டின் இறுதியில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டை கடன்பட்டோரின் 6% மாக அதிகரிக்கவும் கழிவீட்டிற்குக் கடன்பட்டோரின் 1% ஏற்பாடொன்றை ஆக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

பின்வருவனவற்றை செய்யுமாறு கேட்கப்படுகின்றீர்?

அ) 1987, 1988 ஆகிய ஆண்டுகளுக்கு ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டுக் கணக்கைத் தயாரிக்க.

ஆ) தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் 1988 ம் ஆண்டின் இலாப நட்ட கணக்கிற் காணப்படும் பொருத்தமான உருப்படிகளைக் காட்டுக.

இ) 1988.12.31 ல் இருந்தபடி ஐந்தொகையில் கடன்பட்டோர் தொடர்பான மீதிகளைக் காட்டுக.

50) புடவை உற்பத்தி செய்யும் வியாபாரமான வரையறுத்த சுமந்தி கம்பனி கணக்கேடுகளில் பொறித்தொகுதி இயந்திரசாதனம் ஆகியவற்றிற்குக் கொள்விலையில் ஆண்டுக்கு 20% சதவீதப்படி தேய்மானம் ஏற்பாடு செய்கின்றது. புதிதாகக் கொள்வனவு செய்து நிதியாண்டின் முடிவில் தொடர்ந்து கைவசமிருக்கும் (புதிய) பொறிகளுக்கு அவை கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுக்கு ஒரு முழு ஆண்டுக்குத் தேய்மானம் ஏற்பாடு செய்யப்படுகின்றது. விற்பனை செய்யப்படும் ஆண்டுக்குத் தேய்மானம் எதுவும் பிரிக்கப்படுவதில்லை கம்பனிக் கணக்கேடுகளில்

(அ) பொறிகளுக்கும் (கொள்விலையில்)

(ஆ) தேய்மானத்திற்கான ஏற்பாடுக்கும் வேறுவேறாக கணக்குகள் வைத்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிகளின் விற்பனையில் உண்டாகும் இலாபம் அல்லது நட்டம் இலாப நட்டக்கணக்குக்கு மாற்றப்படுகிறது.
1983.03.31 இருந்த பொறிகளின் மூலதனச் செலவீனம் பின்வருமாறு ஏற்ப்பட்டுள்ளது

| | ரூபா |
|---|---|
| 1978.03.31.ற்கு முன் கொ/வு செய்தவை | 101 000 |
| 1980.03.31வரையான ஆண்டில் கொ/வு செய்தவை | 60 000 |
| 1981.03.31வரையான ஆண்டில் கொ/வு செய்தவை | 75 000 |
| 1982.03.31வரையான ஆண்டில் கொ/வு செய்தவை | 60 000 |
| 1983.03.31வரையான ஆண்டில் கொ/வு செய்தவை | 40 000 |

1984.03.31 வரையான ஆண்டுக்காலத்தில் பொறிகளின் விற்பனையும் கொள்வனவும் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

| பொறி இல | கொ/வு திகதி | வி/னை திகதி | கொள்விலை ரூபா | விற்றவிலை ரூபா |
|---|---|---|---|---|
| FTP012 | 10.2.1978 | 25.2.1984 | 15 000 | 2 400 |
| FTP075 | 20.3 1980 | 25.2.1984 | 60 000 | 15 000 |
| FTP102 | 14.8.1981 | 25.2.1984 | 30 000 | 4 200 |
| FTP123 | 10.4.1983 | 25.2.1984 | 20 000 | 18 000 |
| FTP124 | 20.21984 | - | 25 000 | - |

**நீர் செய்ய வேண்டியவை:**

(அ) 1984.03.31ல் முடிவுற்ற ஆண்டுக்குப் பொறிக்கப்பட்ட தேய்மானம் கணிக்கப்பட்ட முறையை காட்டுக

(ஆ) 1984.03.31ல் முடிவுற்ற ஆண்டுக்கான பின்வரும் கணக்குகளை எழுதுக.

1. பொறித்தொகுதி இயந்திரசாதனக்கணக்கு?
2. பொறித் தொகுதி இயந்திர சாதனத்தின் தேய்மானஏற்பாட்டுக் கணக்கு
3. பொறிகளின் கையளித்தற் கணக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(51)

அ. பாலா உற்பத்திக் கம்பனியின் பொதுப் பேரேட்டிலிருந்து 1992 .01.01 ந் திகதியன்று இருந்தபடி,பின்வரும் மீதிகள் பெயர்த்தெடுக்கப்பட்டன.

| | |
|---|---|
| காணியும் கட்டடங்களும் | 500 000 |
| பொறிவிருட்சமும் பொறித் தொகுதியும் | 125 000 |

உற்பத்தி இயலளவை அதிகரிக்கச் செய்தமைக்காக 1992ம் ஆண்டில் விரிவுபடுத்தல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று மேற்கொள் ளப்பட்டது.

1. 175000/= ஆன விலைக்குப் புதிய காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. உறுதிகளைத் தயாரிப் பதில் செலவிட்ட சட்ட முறைக் கட்டணங்கள் 25000/= ஆகும்.

2. ஏற்கனவே இருந்த பொறித் தொகுதியைக் கழற்றி அகற்றி மீளநிறுவுவதற்கு 50000/= செலவிடப்பட்டது

3. புதிய பொறித் தொகுதி ஒன்று 150000/= ஆன விலையிற் கொள்வனவு செய்யப்பட்டது. புதியபொறித்தொகுதியின் ஏற்றியிறக்கற் கட்டணம் 7500/= நிறுவுதற் கட்டணம் ரூ 16000 ஆகியன கம்பனியினால் செலுத்தப்பட்டன.

4. தொழிற்சாலைக் கட்டணத்திற்குத் தீந்தை அடிப்பதற்கு 12000/= செலவிடப்பட்டது

5. ஏற்கனவே இருந்த பொறித்தொகுதியில் மாற்றங்களைச் செய்வதற்கு 60000/= ஆகிய தொகை செலவிடப்பட்டது . இம்மாற்றங்கள் காரணமாகப் பொறித் தொகுதியின் உற்பத்தி இயலளவு அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) 1992.12.31ல் முடிவுற்ற ஆண்டிற்குப் பின்வருவனவற்றை தயாரிக்குக.

1. காணி,கட்டடங்கள் கணக்கு
2. பொறிவிருட்ச, பொறித் தொகுதிக் கணக்கு

(இ) அ விற்கான உமது விடையில் மேலே தரப்பட்ட தகவல்களுள் எதனையும் நீர் பயன்படுத்தவில்லை எனின் அதற்கான காரணங்களை எடுத்துரைக்க.

53) 2003.3.31 ல் வரையறுக்கப்பட்டலங்கா தேயிலைக் கம்பனியின் ஐந்தொகையில் இருந்து பின்வரும் மீதிகள் பெயர்தெடுக்கப் பட்டவையாகும்.

| | |
|---|---|
| இயந்திரம் கிரயத்தில் | ரூபா 330 000 |
| இயந்திரப் பெ.தே ஆன ஏற்பாடு | ரூபா 120 000 |

இக்கம்பனி இயந்திரத்துக்கு நேர்கோட்டு முறையில் வருடத்திற்குபெ.தே. இடுகின்றனர்.கீழே தரப்பட்டுள்ள பிழைகள் இயந்திரக் கணக்கில் மேற்கொள்ளப்பட்டன.இவைகள் பெ.தேய்வை கணிப்பிடுவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன எனக் கண்டு பிடிக்கப்பட்டன.

1) 2002.04.01 ல் கொள்வனவு செய்யப்பட்ட 75000/= கிரயமுள்ள இயந்திரம் ஒன்று கொள்வனவுக்கனக்கில் பதியப்பட்டது. இவ்வியந்திரத்தை பொருத்துவதற்காக எழுந்த செலவு 5000/= ஐப் பொதுச் செலவுக் கணக்கில் வரவில் பதியப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) 2002.11.01 ல் மேற்க் கொள்ளப்பட்ட இயந்திர திருத்தச் செலவுகள் ரூ50 000 ம் இயந்திரக் கணக்கில் வரவில் பதியப்பட்டது.

2003/2004 வருட காலத்தில் எழுந்த கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

2002.07.01 ல் 60000/= கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரமொன்று 2004.01.01 ல் சேதத்திற் குள்ளாகியது இவ்வியந்திரம் சேதமடைந்த அதேதிகதியில் இவ்வியந்திரத்துக்காக ரூ72000 கிரயமுள்ள புதிய இயந்திரமொன்று பதிலீடு செய்யப்பட்டது. சேதமடைந்த இயந்திரத்தை 3000/=க்கு விற்பனை(முடிவு செய்தல்) செய்ய முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டதுடன் இதற்கான 38000/= நட்ட ஈட்டுக் கோரிக்கையும் நட்ட ஈட்டுக் கம்பனியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வேண்டப்படுவது:

1) மேலே தரப்பட்டுள்ள (1) இனதும் (2) இனதும் கீழ் இயந்திரக் கணக்கிலும் இயந்திரத் தேய்வுக் -கான ஏற்பாட்டுக் கணக்கிலும் வழுக்களை திருத்தி 2003.03.31 ல் உள்ள சரியான மீதி - -களைக் காட்டுக.

2) 2004.03.31 இன் வருட முடிவுக்கான பின்வரும் கணக்குகள்.
   1) இயந்திரக் கணக்கு
   2) இயந்திர பெ.தே.ஏ.கணக்கு
   3) இயந்திர பெ.தே. கணக்கு
   4) இயந்திர முடிவு செய்தல் (விற்பனை) கணக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C.B.A கல்வி நிலையம்
கதிரேசு வீதி, வவுனியா

சுடர் கல்வி நிலையம்
குட்செட் றோட், வவுனியா

| | | |
|---|---|---|
| கணக்கீடு | :- | K.T. சீலன் |
| பொருளியல் | :- | N.M சுபாஸ் |
| வணிகக்கல்வி | :- | T. வரதன் |

C.B.A Printers Kathirasu Rd, Vavuniya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org